**தலைப்பு 154 – கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

தலைப்பு 154 – கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 நவம்பர் 10 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

--------------------

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---------------------------------

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

-------------------------------------------------------

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 10,370.43 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றுள் ரூபா 8,302.98 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 2,067.45 மில்லியன் அதாவது 19.94 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 942.47 | 937.73 | 4.74 | 0.50 |
| மூலதனம் | 9,427.96 | 7,365.25 | 2,062.71 | 21.88 |
| மொத்தம் | 10,370.43 | 8,302.98 | 2,067.45 | 19.94 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 15401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 18.00 | 17.72 | 8.00 | 11.36 | 80.00 | 30.15 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழ்வரும் மூன்று வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.12 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0129/000 | 0.02 |
| 6000/0000/00/0002/0181/000 | 0.72 |
| 6000/0000/00/0013/0140/000 | 0.38 |
| மொத்தம் | 1.12 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற நிலையான சொத்துப் பதிவேடுகள் நாளது வரையாக்கப்படாதிருந்ததுடன் ஏனைய பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | மின்சார உபகரணங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (iv) | அலுவலக தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) |
| (v) | ஆளணி வேதனப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453(1) |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 42.70 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் எவ்வித பயன்பாடுமின்றி முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 33 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த நிதிஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த சில செலவின விடயங்களுக்குரிய பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படாமை மற்றும் சில

செலவின விடயங்களில் மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 15401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திறைசேரி கணனிக் குறிப்பு மற்றும் 2016 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம், மீதிகளுக்கிடையே ரூபா 567,822 தொகையான வேறுபாடு காணப்பட்டது. அந்த வேறுபாட்டில் ரூபா 4,782 தொகைக்காக மாத்திரம் அமைச்சினால் காரணம் இனங்காணப்பட்டிருந்த போதும் அவற்றை சரி செய்வதற்கு 2017 யூன் 13 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இடம்மாற்றலாகிச் சென்ற எட்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடவேண்டிய ரூபா 263,558 கூட்டுத்தொகையான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அந்த நிலுவை கடன் மீதி 6 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்தக் கடன் மீதி 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(இ) 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடவேண்டிய கடன் மீதி ரூபா 229,104 ஆக இருந்தது. அந்தக் கடன் மீதி தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 2017 யூன் 13 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஈ) சேவையை விட்டுச் சென்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 103,469 கடன் மீதியை அறவிடுதல் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் கடிதத்தின் 3 ஆம் பந்திக்கு முரணாக பிரதி அமைச்சரின் பாவனை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படக்கூடிய ஆகக் கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் (மோட்டார் வண்டி / ஜீப் / டபள்கப்) எண்ணிக்கை 3 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த எல்லையை விஞ்சி பிரதி அமைச்சருக்கு குழாம் வாகனமொன்றும் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சர் தனிப்பட்ட ரீதியில் தேசிய கால்நடை வள சபைக்கு தீர்க்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் அவரினால் 2 குழாம் வாகனங்கள் 2016 பெப்ரவரி 26 ஆந் திகதி முதல் 2017 மே 07 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற 51 வாகனங்களில் 49 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அமைச்சுக்கு சொந்தமற்ற ரூபா 7,300,000 கூட்டுப்பெறுமதியான 03 வாகனங்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வாகனங்கள் 8 மாதம் முதல் 21 மாதம் வரையான காலவீச்சில் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு விளைவற்ற நிலையில் அமைச்சின் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.4.2 வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சினால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சினால் ஏனைய நிறுவனங்கள் மற்றும் பிரதேச அலுவலகங்களுக்காக வழங்கப்பட்டிருந்த கட்டிடங்கள் தொடர்பாக கட்டிட வாடகை உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 2017 யூன் மாதம் வரையிலும் கட்டிட வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. 2017 யூன் 07 ஆந் திகதி பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் படி 2015 ஏப்ரல் மாதத்திலிருந்து வாடகைக்கு வழங்கப்பட்ட கட்டிடத்திலிருந்து அறவிட வேண்டிய மாதாந்த வாடகையின் கூட்டுத்தொகை ரூபா 152,500 ஆக இருந்தது. 2015 ஏப்ரல் மாதத்திலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சினால் சேமிக்கப்பட வேண்டிய (21 மாதங்களுக்கான) வாடகை வருமானம் ரூபா 3,202,500 ஆக இருந்த போதிலும், அந்த வாடகை 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அந்தக் கட்டிடத்திற்கான மின்சாரம், நீர், பாதுகாப்பு சேவைக் கட்டணம் மற்றும் ஆதன வரியாக கூட்டுமொத்தமாக ரூபா 1,295,357 அமைச்சினால் 2015 ஏப்ரல் மாதம் முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் செலுத்தப்பட்டிருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதி வரையில் அந்த செலவினத்தில் ரூபா 402,835 தொகை அதாவது செலவிடப்பட்ட தொகையில் 31 சதவீத அளவு மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 3.4.5 வாகனம் தொடர்பான மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்காக அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று 2017 நவம்பர் 10 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்படவில்லை.

### 3.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

மீளாய்வாண்டின் போது 14 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு கூட்டுமொத்தமாக ரூபா 241,311 ஆக இருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த செலவின விடயங்களின் நிதிஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 6,004,628 இனால் விஞ்சி கூட்டுமொத்தமாக ரூபா 6,245,739 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 3.6 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (i) நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | வாகனங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | அமைச்சின் 26 குழாம் வாகனங்களுக்குரிய 2016 சனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான 11 மாத காலத்திற்காகவும், 12 வாகனங்களுக்குரியதாக திசெம்பர் மாதத்திற்காகவும் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை** | |
| 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 251/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.13 ஆம் பந்தி | 2016 ஆம் ஆண்டிற்குரிய மூலதனச் செலவினம் தொடர்பான விபரங்கள் மற்றும் உரிய அறிக்கை என்பன 2017 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையிலும் அரச கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | |
| 1990 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### 3.7.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் கிராமிய பொருளாதார அமைச்சின் கீழ் சந்தை விலையை நிலையானதாக ஏற்படுத்துவதற்கு அறுவடையின் பின்னரான இழப்பைக் குறைப்பதற்காக தனியார் துறையின் மூலம் முகாமை செய்யப்படுகின்ற 5 குளிரூட்டிக் கூடங்களை நிர்மாணிப்பதற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 2,000 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இந்த செயற்திட்ட அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் கீழ் 2016 சனவரி மாதம் முதல் 2016 திசெம்பர் மாதம் வரையிலான வருட காலத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2017 யூன் 26 ஆந் திகதி வரையிலும் உரிய நிர்மாணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 5 குளிரூட்டிக் கூடங்களை நிர்மாணித்தல் தொடர்பாக சாத்தியவள ஆய்விற்காக குழுவொன்றிற்கு 2016 பெப்ரவரி 05 ஆந் திகதி அமைச்சினால் 11 அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி சாத்தியவள ஆய்விற்கான முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. அக்கூட்டத்திற்காக அழைப்பு விடுக்கப்பட்ட 11 உத்தியோகத்தர்களுகளை மேலதிகமாக இன்னும் இரண்டு உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 13 அங்கத்தவர்கள் பங்குபற்றியிருந்தனர். அந்தக் கூட்டத்திற்காக விடயப்பொறுப்பு அமைச்சரும் பங்குபற்றியிருந்தார். அந்தக் கூட்டத்தின் போது மேற்கூறப்பட்ட செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டமாக 02 பிரதேசங்கள் இனங்காணப்பட்டு 07 பயிர் வகைகளுக்காக 02 குளிரூட்டிக் கூடங்கள் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி நியமிக்கப்பட்ட சாத்தியவள ஆய்வுக்குழு 2017 பெப்ரவரி 10 மற்றும் 2017 மார்ச் 30 ஆந் திகதிகளில் 02 சந்தர்ப்பங்களில் கூட்டப்பட்டிருந்தது. அமைச்சினால் அக்குழுவின் சாத்தியவள ஆய்வு அறிக்கை 05 சந்தர்ப்பங்களில் எழுத்துமூலம் கோரப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கை 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கைக்காக குழுவின் தலைவரின் கையொப்பம் மாத்திரம் இடப்பட்டிருந்ததுடன், ஏனைய அங்கத்தவர்கள் கையொப்பமிட்டிருக்கவில்லை. 06 முன்மொழிவுகளை உள்ளடக்கி அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டத்தை அங்கீகரித்ததன் பின்னர் 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி மீண்டும் சாத்தியவள ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கையில் அவசியமாக காணப்படவேண்டிய பின்வரும் விடயங்கள் தொடர்பான ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- ❖ தொழில்நுட்ப சாத்தியவள ஆய்வு
- ❖ செயற்பாட்டு சாத்தியவள ஆய்வு
- ❖ சட்ட ரீதியான சாத்தியவள ஆய்வு
- ❖ நிதி தொர்பான சாத்தியவள ஆய்வு

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகள் 2.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் செயற்திட்டத்திற்குரிய பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன் சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடு மற்றும் சமூக தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த செயற்திட்டம் தொடர்பான அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக அமைச்சின் செயலாளரினால் அவ்வாறான மதிப்பீடொன்று இந்த செயற்திட்டம் தொடர்பாக அவசியமற்றதென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.7.2 செயற்திட்டங்களை அமுல்படுத்தாமை

அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்கு இடையே பின்வரும் செயற்திட்டங்களில் எந்தவொரு செயற்திட்டமும் சப்ரகமுவ மாகாணம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கீழ் வரும் கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கன மற்றும் தெரனியகல மிருக வைத்திய அலுவலகங்களிலும், இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மதுள்ள, ஓபநாயக்க, குருவிட்ட, அயகம, நிவித்திகல, கொடக்கவெல மற்றும் கஹத்த மிருக வைத்திய அலுவலகங்களிலும் அமுல்படுத்தப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) இன விருத்திப் பண்ணைகளை ஸ்தாபிக்கும் செயற்திட்டம்

(ஆ) சுற்றாடலுக்கு சாதகமான பன்றி கட்டுப்பாடு அபிவிருத்தி செயற்திட்டம்

(இ) தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் (சிறிய அளவிலான ஆட்டுப் பண்ணையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்)

(ஈ) உடன் பால் நுகர்வை மேம்படுத்தும் செயற்திட்டம் (சிறிய அளவிலான பால் பண்ணைகளில் தரமான பால் உற்பத்தியை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டம்)

### 3.7.3 செயற்திட்டங்களை அமுல்படுத்தும்போது மேற்பார்வை நலிவாக இருந்தமை

சப்ரகமுவ மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது சரியான மேற்பார்வையொன்று இடம்பெறாமையினால் அரச நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றது.

(அ) மாவனல்ல கால்நடை வைத்திய அதிகாரப்பிரதேசத்தில் நலனாளியொருவருக்கு ஒரு ஆட்டுக் கடாயும் மறியும் வீதம் 10 பேர்களுக்கு கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000 வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏனைய நபர்களின் பொறுப்பில் இருந்த ஆடுகளைக் காண்பித்து இப்பணம் மோசடியாகப் பெறப்பட்டுள்ளது.

(ii) நலனாளி மாவனல்ல நகரத்தில் பிரதான கட்டிடப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரமொன்றின் உரிமையாளராக இருந்தமையும், மாவனல்ல கால் நடை வைத்திய அலுவலகத்தில் மிருக அபிவிருத்தி மதியுரையாளரால் நலனாளி ஆட்டுப் பண்ணையைக் காண்பித்து பண்ணையின் உரிமையாளராக வேறொருவர் செயற்பட்டிருந்தார். அவரால் பராமரிக்கப்பட்ட பண்ணை நலனாளியையும் உள்ளடக்கிய மேலும் இரண்டு பேர்களுடன் கூட்டாக பேணிச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) இக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய விற்பனையாளர் தற்போது இன விருத்திப் பண்ணை அல்லது ஆட்டுப் பண்ணையொன்றை நடாத்திச் செல்லாதிருந்தமையும் உரிய இடம் ஆட்டுப் பண்ணையை நடாத்திச் செல்வதற்காக இடவசதியற்ற நகர இடமொன்றாக இருந்தது. எனினும், விற்பனையாளரினால் நலனாளிக்கு 02 ஆடுகள் ரூபா 43,000 இற்கு விற்பனை செய்யப்பட்டமையும், 04 ஆடுகள் பராமரிப்பதற்காக வழங்கப்பட்டிருந்தமையும், தானும் அந்த பண்ணையின் ஒரு பங்கதாரராக இருக்கின்றதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(iv) எனினும், மிருக வைத்திய அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் இந்த 11 மிருகங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 369,450 ஆக இருந்த போதிலும் விற்பனை செய்தவரின் கூற்றுப்படி அவர் பெற்ற தொகை ரூபா 43,000 ஆக இருந்தது.

(ஆ) மாவனல்ல மிருக வைத்திய அதிகாரப் பிரதேசத்தில் நலனாளியொருவருக்கு 10 பெண் ஆடுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த மிருகங்களைக் கொள்வனவு செய்யும் போது 6 ஆடுகள் ரூபா 66,240 இற்கு விற்பனை செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டு இரண்டு விற்பனையாளர்களினால் எந்தவொரு நபருக்கும் ஆடுகள் விற்பனை செய்யப்படவில்லை எனவும், அவர்களினால் ஆடுகள் விற்பனை செய்யப்பட்டதாக வழங்கப்பட்ட கடிதம் மற்றும் அவற்றின் கையொப்பம் அவர்களுடையது இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், போலியான பெயர் மற்றும் போலியான கையொப்பமிட்டு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு ஆடுகளுக்காக பணம் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.8 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

அமைச்சின் கீழ் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்புகளுக்கிடையே கிராமிய புனர்வாழ்வு நிதியம், கிராமிய பொருளாதார புனர்வாழ்வு நிதியம் (நிதிசார்) மற்றும் ஜனதிரிய நிதியம் (கிராமோதய சபை நிதியம்) என்பன 2016 ஆம் ஆண்டின் போதும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**(ஆ) திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக செயலாற்றல் அறிக்கையுடன் செயலாற்றலை மேற்பார்வை செய்து சரிசெய்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) செயலாற்றல் அறிக்கயின் பிரகாரம் 06 செயற்திட்டங்களுக்குரிய 06 செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 3 சதவீதம் முதல் 33 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) உடன் பால் பாவனையை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் (சிறியளவிலான பால் பண்ணைகளில் தரமான பால் உற்பத்தியை மேலோங்கச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்) கீழ் ஒரு மாவட்டத்திலிருந்து 20 விவசாயிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய 02 மாவட்டங்களில் 40 நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒரு நாளைக்கு இரண்டு மாடுகள் அல்லது உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக நிதிஏற்பாடு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 1,200,000 தொகையான நிதிஏற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 41.5 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.9 பொருளாதார நிலையங்களைத் தாபித்தலும் மேற்பார்வை செய்தலும்

### 3.9.1 பிரதான பணிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தல்

விவசாயிகளின் விவசாய உற்பத்திகளை நேரடியாக விற்பனை செய்வதற்காகவும், உற்பத்தியாளர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்கள் நேரடியாகத் தொடர்புபடும் வகையில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் உற்பத்திகாக போட்டித் தன்மையின் ஊடாக செயற்திறனான விலைப்பொறிமுறையை அமுல்படுத்துவதை நோக்காகக் கொண்டு விஷேட பொருளாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதில் எதிர்பார்க்கப்படுகின்ற போட்டியாளர் விலையை உற்பத்தியாளர்களுக்காக வழங்குவதற்கும், நுகர்வோர்களுக்காக செயற்திறனான நியாயமான விலைப் பொறிமுறையொன்றை அமுல்படுத்துவதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு போதியளவான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9.2 பொருளாதார நிலையம்

பொருளாதார நிலையம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் பொருளாதார நிலையங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ள 04 பொருளாதார நிலையங்கள் 2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 08 நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 12 நிலையங்களின் நிதிக்கூற்றுக்களும் 03 மாதங்கள் முதல் 2½ வருடங்கள் வரையிலான கால தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2003 பெப்ரவரி 05 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த எம்பிலிபிட்டிய பொருளாதார நிலையத்தில் 2003 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) கடைகளில் வாடகை அறவிடல்

தம்முத்தேகம பொருளாதார நிலையத்தில் கடைக்கான வாடகை 2016 செப்தெம்பர் மாதம் முதல் அமுலாகும் வகையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த திருத்தத்தின் பிரகாரம், வாடகையாளரினால் வாடகை செலுத்தாமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,026,750 தொகையான வாடகை

நிலுவையாகக் காணப்பட்டது. இவ்வாறே அதற்காக ஏற்பட்ட தண்டப்பணம் ரூபா 548,800 தொகையும் நிலுவையாகக் காணப்பட்டது. அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அமைச்சு தவறியிருந்தது.

**(இ) ஆரம்பிக்கப்படாத பொருளாதார நிலையம்**

2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த கிளிநொச்சி மற்றும் அம்பாறை பொருளாதார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 96.7 மில்லியன் மற்றும் ரூபா 29.2 மில்லியன் செலவிடப்பட்டு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்த பொருளாதார நிலையம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிர்மாணிக்கப்பட்ட பொருளாதார நிலையங்களை வேறு நிறுவனங்களுக்கு வழங்கியமை**

சாத்தியவள ஆய்வின்றி பொருளாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 136 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 3 பொருளாதார நிலையங்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வேறு நிறுவனங்களுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

**(உ) செயற்பாடற்றுக் காணப்பட்ட பொருளாதார நிலையங்கள்**

2006 சனவரி 25 ஆந் திகதி ரூபா 21 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்ட 25 கடைகளிலிருந்து கந்தஹந்திய பொருளாதார நிலையம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செயற்படு நிலையில் காணப்படவில்லை. கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு விவசாய உற்பத்திகளை பரிமாற்றும் நிலையமொன்றாகப் பயன்படுத்துவதற்கும் மற்றும் சட்டம், சமாதானம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் பொலிஸ் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்காகவும் கோரப்பட்டிருந்தது.

**(ஊ) வெலிகம, தெனிப்பிட்டிய சந்தை வளவில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட விஷேட பொருளாதார நிலையம்**

2014 ஆம் ஆண்டில் திறைசேரி நிதிஏற்பாடுகளில் இருந்து ரூபா 6.9 மில்லியன் செலவிட்டு நிர்மாண நடவடிக்கைகள் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த பொருளாதார நிலையம் தொடர்பாக அவதானிப்பு அறிக்கையை வழங்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழுவினால் இந்த இடம் பொருளாதார நிலையமாக அபிவிருத்தி செய்தல் பொருத்தமற்றது என அறிக்கையிடப்பட்டிருந்தது. அந்த நிலையம் தென் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் செலவிடப்பட்ட ரூபா 6.5 மில்லியனில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தது.

**3.10 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 30 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 695 | 612 | 83 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 51 | 59 | - | 08 |
| (v) | ஏனைய (ஒப்பந்த/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | 04 | - | - |
| | மொத்தம் | 786 | 707 | 87 | 08 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான பிரகாரம் அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தவறியிருந்தது.